Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# மராட்டியர்கள் கால ஆடற்கலை கலாச்சார மாற்றங்கள்

**S.நர்மதா**
**இசைத்துறை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம்**
**அண்ணாமலை நகர்**

16

**ஆய்வுச்சுருக்கம்:**

சங்க காலம் முதல் சோழர்கள் காலம் வரை தமிழகத்தில் ஆடற்கலையில் தமிழ் கலாச்சாரம்தான் பின்பற்றப்பட்டு வந்துள்ளது. தமிழகத்தில் சோழர்கள் ஆட்சிக்குப் பின் நாயக்க மன்னர்கள் ஆட்சி ஏற்பட்டது. இந்த நாயக்க மன்னர் காலத்தில் கலாச்சார மாறுபாடு உண்டானது. தமிழில் இருந்த ஆடல், பாடல் எல்லாம் தெலுங்கு மொழிக்கு மாற்றம் காணப்பட்டன. நாயக்க மன்னரின் தாய் மொழி தெலுங்கு என்பதால் அவர்கள் தங்கள் தெலுங்கு தேசத்திலிருந்து தங்களுக்குத் தேவையான கலைஞர்கள், சமையல்காரர்கள், பட்டு உற்பத்தியாளர் என்று அவர்களுக்கு தேவையானவர்களை அங்கங்கு வரவழைத்துக் கொண்டார்கள். கலைகளும், கலாச்சாரமும் பெறும்பாலும் தெலுங்கு மொழியிலேயே இருந்தன, வார்த்தை மொழியும் பெறும்பாலும் தெலுங்கு மொழியே பின்பற்றப்பட்டன.

அதனை தொடர்ந்து ஆடல், பாடல் அனைத்துமே தெலுங்கின் வண்ணமாகிப் போனது. அதுவரை தமிழில் இருந்த ஆடல், பாடல் தெலுங்கில் பாடி, ஆடப்பட்டன. தமிழ் ஒரு தீண்டாத மொழியாய் போனது. வடமொழி தெலுங்கு மொழிக்கு மட்டுமே முன்னுரிமை அளிக்கப்பட்டது. அதுவரை 'கூத்து' என்றிருந்தது, பின் இவர்கள் காலத்தில் 'சதிர்கச்சேரி' என்று மாறிப்போனது. இவர்கள் நாட்டிய உருப்புகளை மாற்றி அமைத்தார்கள். "நிரூபணம்" என்ற அமைப்பிற்கு மாற்றினார்கள். நாயக்க மன்னர்கள் காலத்திற்கு பிறகு தமிழகத்தில் மராட்டியர்கள் கால ஆட்சி ஏற்பட்டது. இவர்கள் ஆட்சியில் இன்னும் கொஞ்சம் கலாச்சாரம் மாறிதான் போனது.

நாயக்க மன்னர்கள் கால ஆட்சியிலாவது தெலுங்கும், வடமொழியும் இருந்தது. ஆனால் மராட்டியர்கள் கால ஆட்சியில் தெலுங்கு, வடமொழி, ஹிந்தி, மராத்தி ஆங்கிலம் என ஐந்து மொழிக் கலவையாகிப் போனது ஆடற்கலைகளில் இந்த ஐந்து மொழிகளும் பயன்படுத்தப்பட்டன. இவர்கள் காலத்தில்தான், தஞ்சை நால்வர்கள் என்ற மிகப்பெரிய நான்கு நட்டுவனார்கள் இருந்தார்கள். இவர்கள் நாயக்க மன்னர்கள் அமைத்த 'நிரூபணம்' என்ற அமைப்பை கொஞ்சம் மாற்றி காலத்திற்கேர்த்தார் போல் 'மார்க்கம்' என்ற அமைப்பை உறுவாக்கினார். அந்த மார்க்கம் இன்று வரைத் தொடரப்பட்டாலும் தற்போது கலைகளிலும்

கலாச்சாரத்திலும் மாற்றம் ஏற்பட்டுதான் இருக்கிறது.

**தலைப்பின் அறிமுகம்:-**

மராட்டியர் ஆட்சி காலத்தில் தெலுங்கு, ஹிந்தி, வடமொழி, மராத்தி ஆங்க்லம் என ஐந்து மொழியிலும் ஆடல், பாடல் பயன்படுத்தப்பட்டன. இதில் கலை வளர்ச்சியில் தஞ்சைக்குத் தனி இடம் உண்டு. தஞ்சையை ஆண்ட இராசராச சோழன் தஞ்சையில் நானூறு ஆடல் மகளிரைப் பெரிய கோவிலில் நடனமாட ஏற்பாடு செய்திருந்தார் என்று அவர் வரலாறு கூறுகின்றது. தஞ்சைக்கும் ஆடற்கலைக்கும் ஒரு நெருங்கிய தொடர்பு ஏற்பட்டு வந்தது. தஞ்சையை ஆண்ட நாயக்க மன்னர்களும், மராட்டிய மன்னர்களும் இக்கலையின் வளர்ச்சிக்குப் பெரிதும் துணைப்புரிந்தனர். மராட்டிய மன்னர்களில் துளஜா II (1763 – 1787_, அமரசிம்மன் (1787-1798), சரபோஜி II (1798 – 1832), ஷாஜி II (1832 – 1885) காலங்களில் தஞ்சையில் நாட்டியக்கலையும் இசைக் கலையும் பெரிதும் போற்றப்பட்டன.

தஞ்சையில் நாயக்க மன்னர்கள் காலத்திலும், மராட்டியர்களின் காலத்திலும் சதிர்கச்சேரி, பாகவதமேளம் என்ற இரு நாட்டியச் சம்பிரதாயங்கள் தோன்றின. இன்று பரதநாட்டியம் என்று கூறப்படும் நாட்டியத்தை அன்று சதிர்கச்சேரி என்று அழைத்தனர். சங்கீதமும், நாட்டியமும் மேலோங்கிய நிலையில் இருந்ததால் இதனைச் சதிர்கச்சேரி என்று அழைத்தனர். இச்சதிர் கச்சேரியில் தட்டுவனார், நடனப்பெண்கள், பாடகர், வாத்தியக்காரர்கள் இருப்பர். பெண்கள் பெரும்பாலும் பங்கேற்று நடிப்பர். ஆண்கள் ஆடும் நாட்டியத்தை பாகவதமேளம் என்றும், பெண்கள் ஆடும் நாட்டியத்தைச் சதிர் கச்சேரி என்றும் அழைத்தனர்.

**மராட்டியர்கள் கால ஆடற்கலை கலாச்சார மாற்றங்கள்**

**முன்னுரை:-**

இதில் சங்ககாலம் முதல் சோழர்கள் காலம் வரை ஆடற்கலையில் தமிழ் கலாச்சாரம் பின்பற்றப்பட்டு வந்துள்ளது. பின் நாய்க்க மன்னர் ஆட்சிக்கு பின் தெலுங்கு மொழியில் பாட்டும், ஆடலும் அவ்ர்களின் கலாச்சாரத்திற்கு ஏற்ப மாற்றம் கண்டது. பெறும் பாலும் தெலுங்கு மொழிலேயே மக்கள் தாய்மொழியாக கடைப்பிடிக்கப்பட்டது. கூத்துகளாக இருந்தது. பின் சதிர்கச்சேரியாக மாறிப்போனது. பின் மராட்டியகால ஆட்சி ஏற்பட்டது. அதன் பின் தெலுங்கு, வடமொழி, ஹிந்தி, மராத்தி, ஆங்கிலம் போன்ற பிறமொழிகள் அனைத்தும் பாடல், ஆடற்கலையில் பயன்படுத்தப்பட்டன. மராட்டியர் காலத்தில் தஞ்சை நால்வர்களாகிய நாயக்க மன்னர்கள் அமைத்த 'நிரூபணம்' என்ற அமைப்பை மாற்றி காலத்திற்கு ஏற்றதுபோல 'மார்க்கம்' என்ற அமைப்பை உறுவாக்கினார். இந்த மார்க்கத்தைத்தான் இன்று வரை நடன கலைஞர்கள் அரங்கேற்றத்தில் ஆடி பின்பற்றி வருகிறார்கள்.

**மராட்டியர் காலத்தில் நாட்டியம் மற்றும் நாடகம்:**

புதியதாக, இசை, நாட்டியம் மற்றும் நாடகம் ஆகிய மூன்றையும் ஒருங்கிணைந்து, 'கேய' நாடகங்கள் உருவாக்கப்பட்டன, மன்னர் சஹாஜியே, சங்கர பல்லக்கிசேவா விஷ்ணு பல்லக்கி சேவா, பஞ்ச ரத்ன பிரபந்தம் மற்றும் தியாகராஜ வினோத சித்திர் பிரபந்தம் ஆகிய நான்கு கேய நாடகங்களை எழுதியுள்ளார்.

நாட்டிய நாடக வகையில் மேலும் ஓர் புதுவரவாக 'திருஷ்ய்' காவியங்கள் உருவாயின. யக்ஷகானம் மற்றும் பிரபந்தங்கள் ஆகிய இரண்டையும் கலந்து அவை உருவாக்கப்பட்டன. இவை, நிருத்தா, நிருத்யா மற்றும் அபிநயா ஆகிய மூன்று நாட்டிய கூறுகளை உள்ளடக்கியவையாகும்.

பல்லக்கி சேவா என்பது கேய நாடகங்களிலேயே பழமையான ஒன்றாகும். இதில், அவர் பல்லக்கு தூக்குபவர்கள் ஓர் குறிப்பிட்ட தாள் முறையில் தமது பாதங்களை எடுத்து வைக்குமாறு அமைந்திருந்தார். தனது விஷ்ணு பல்லக்கி சேவாவில், உற்சவ மூர்த்தியை பல்லக்கில் தூக்கிக் கொண்டு வரும் பொழுது ஒரே சீராக அவர்கள் அடியெடுத்து வைத்துக் கொண்டே பாடவும் வேண்டும் எனக்குறிப்பிட்டுள்ளார்.

பல்லக்கி சேவாவுக்குப் பிறகு, பஞ்சாரத்னம், 5 பேர் கொண்ட ஓர் குழுவில் அதாவது 2 நடனக் கலைஞர், ஒரு நட்டுவானர் (பெரும்பாலும், நட்டுவாங்கம் செய்யும் ஆசானாக இருப்பர்) ஓர் குறத்தி மற்றும் ஓர் சேவகன் ஆகியோரின் தன்மைகளைக் குறிப்பிடுகின்றது. ஒவ்வொருவரும் அவரவர் திறனுக்கு ஏற்றப்படி, இசைக்கு நாட்டியம் ஆட வேண்டுமெனக் கூறுகிறது. பல்வகையான தாள கோர்வைகளும் ஜாதிகளும் இதில் விளக்கப்பட்டுள்ளன. இந்நாட்டிய நூலின் சிறப்பாவது, அதில் இசை மற்றும் தாள அங்கங்களாக, புதிய தாளங்கள் கோர்வைகள், ஜதிகள், கணபதி கவுத்துவம் மற்றும் தரு ஆகியவற்றைக் கொண்டுள்ளது என்பதே சமஸ்கிருதம், தெலுங்கு, மராட்டி மற்றும் தமிழ் ஆகிய நான்கு மொழிகளை ஒருங்கிணைந்து எழுதப்பட்டது. வினோத சித்ர ப்ரபந்தம் என்ற நாட்டிய நாடனமாகும். இதில் காளிக்கும் சிவனுக்கும் சிறந்து, தேவ நடனமா, இராஜ நடனமா, இல்லை கேஸி நடனமா என்று வாக்குவாதம் எழுந்ததாகவும், பின், இருவரும், தேஸி நடனமே சிறந்தது என்று முடிவுக்கு வந்து, அதனை ஆடுவதாகவும் அமைக்கப்பட்டுள்ளது. இதில், மன்னர் சஹாஜி, வாதத்திற்க்காகவும் போட்டிக்காகவுமான அத்தியாயங்களுக்காக, 55 தருக்களை எழுதியுள்ளார். அவை, பல்வேறு தாள வகையில் அமையப்பெற்று தேஸி நடனத்தை முன்னிலைப்படுத்துகிறது. அந்த 55 தருக்கள், பாறவைகள் மிருகங்கள், மலர்கள் மற்றும் மக்களைப் பற்றி எடுத்துக் கூறுவதாக அமையப்பெற்றதால், ஹஸ்த அபிநயத்திற்கான கற்பனைக்கு மிகுந்த வாய்ப்பளிக்கின்றது.

**பிரபந்த இலக்கியம் பல்வேறு பெயர்களால் அமையப்பெற்றன**

- ப்ராக்யார்த பிரபந்த:- இதிகாஸங்கள் மற்றும் புராணங்களை ஆதாரமாகக் கொண்டவை.
- உத்பத்ய பிரபந்த:- புலவரின் கற்பனைத் திறன்படி அமையப் பெற்றவை.
- மிஸ்ர பிரபந்த:- ஓர் புராணத்தை ஆதாரமாகக் கொண்டு, புலவர் தம் சுய கற்பனை வளத்தில் படைப்பது அந்த மூன்றில், அதிகமான மிஸ்ர பிரபந்தங்கள் அந்த காலக்கட்டத்தில் எழுதப்பட்டன. அவை நாட்டியம் மற்றும் நாடகங்கள் இரண்டிலும் உபயோகப்படுத்தப்பட்டன.

மன்னர் சஹாஜி 42 பதங்கள் நாட்டியத்திற்கென்றே எழுதியுள்ளார். மன்னர் செர்போஜி, நாட்டியத்திற்காகவென்றே 'நிரூபணம்' என்ற வகையை உருவாக்கினார். நிரூபணம், ஒரு குறிப்பிட்ட கதைக் களத்தை விளக்கமாக விவரிக்கின்றது.

அதன் 18 உருப்புகளாக, ஜெய ஜெய, சரணு, அலரு, சொல்லு, சபத்ம், வர்ணம், பதம், ஸ்வரஜதி, அபிநய பதம், தில்லானா, அர்ஜித் பதம், ஜக்கிணி, கீதம், ப்ரபந்தம், த்ரி பதம், ஸ்லோக வர்ணம், கவுத்துவம் மற்றும் மங்களம் அமையப்பெறும், இதன் சிறப்பு என்னவென்றால், இவை அனைத்தும் ஒரே இராகம் மற்றும் தாளத்தில் அமைந்திருப்பதாகும். நிருபணங்கள், கடவுள் வாழ்த்தாகத் துவங்கி, மங்களத்துடன் முடியும். ஓர் நடனக்கலைஞரே கதையில் உள்ள அனைத்து கதாபாத்திரங்களின் குணாதியசயங்களும், மன உணர்வுகளையும் படைப்பதாக இது அமையும்.

செர்போஜி மஹாராஜா, பார்வதி உபக்யாணம், சரிபாதத் தேவ கல்பித கத, தண்ட நீதி நிருபணம், மஹா தேவார்சி ப்ரார்த்தனா, ஸகி நாயகி ஸ்ரமனபாங்கலவு, ஸகின நாயகி புத்தி வதா மற்றும் சூலாதி ஆகிய இலக்கியங்களைப் படைத்துள்ளார். நிருபணங்கள் மராட்டிய மொழியில் எழுதப்பட்டிருந்தாலும், கர்நாடக சங்கீத முறையைப் பின்பற்றி, அலரு, சப்தம், சொல்லு, வர்ணம், பதம், தில்லானா கவுத்துவம், ஸ்வரஜதி, ஜக்கிணி மற்றும் மங்களம் ஆகிய நாட்டிய உருப்படிகளை உள்ளடக்கி அமைக்கப்பட்டிருந்த படியால் அனைத்து தட்டு மக்களிடமும் பிரபலமாக இருந்தன.

இசை உருப்பான பிரபந்தம், நாட்டியத்திற்காக உருவாக்கப்பட்டன, துவக்கத்தில், அவை, ஓர் நபரின் காதல் நிலையைப் பிரதிபலிப்பதாக அமைந்தன, பக்தி மார்க்க காலத்தில், அதுவே, கடவுளை நாயகனாகக் கொண்டு, அவைச் சேரத்துடிக்கும், நாயிக பாவமாக மாரியது. பின்னர், பிரபந்தங்கள் இதிகாசங்களையும், புராணங்களையும் மையமாகக் கொண்ட கதைக் களத்தைக் கொண்டு அமைக்கப்பட்டன. இவையே பின்னர், உலா, பரணி கலர்பகம் மற்றும் பிள்ளைத் தமிழ் போன்ற சிற்றிலக்கியங்களாக உருவாயின. புராணங்களை ஆதாரமாகக் கொண்டு புதிய

படைப்புகள் உருவாவது தமிழ் வரலாற்றில் தொன்று தொட்டு இருந்து வந்துள்ளது. இது போன்று நிருபணங்களுக்கு 18 உருப்படிகள் இருப்பதைப் போலவே தமிழில் கலப்பக இலக்கியமும் 18 உருப்படிகளைக் கொண்டிருப்பதைக் காண்கிறோம். செர்போஜி மஹாராஜா காலத்திய மற்றுமொரு நாட்டிய நாடகம், குறவஞ்சி ஆகும். அம்மன்னரே, தேவேந்திர குறவஞ்சி மற்றும் 'தீரிஸ்தல தீர்த யாத்ரா' என்ற லாவணியும் எழுதியுள்ளார். மராட்டிய காலத்தில் இது போன்று பழைமையைத் தழுவிய புதிய நாட்டிய வடிவங்கள் பல வழக்கத்தில் வந்துள்ளன. நாட்டியத்திற்கான பல இசை உருப்புகள் அக்காலத்தில் இயற்றப்பட்டன கலைகள் பல அறிவுப்பசிக்குத் தீனியாகவும், உணர்வு வெளிப்பாட்டுக்கு ஒர் வடிகாலாகவும் அமைந்து, நன்கு வளர்ச்சி அடைந்தன.

எளிய நடையில், நன்னெறியை எடுத்துரைப்பது பொதுவியலாகும். அறிவார்ந்த கருத்துக்களைப் பரிமாறி, கற்றோரை களிப்புரச் செய்யும் கலை, வேதியல் ஆகும். பொதுவியலை தேசி என்றும் வேதியலை மார்க்கி என்றும் அழைப்பர். இதே ரீதியில், மராட்டியர்கள், அரசவையில் ஆடுவதற்கும், பொது அரங்கில் ஆடுவதற்கும் என்று தனித்தனியாக நாட்டியங்களை உருவாக்கினர்.

'நாட்ச்' என்ற நாட்டிய வகை, வடக்கத்திய மற்றும் உள்ளூர் நாட்டியத்தை இணைத்து உருவாக்கப்பட்டது. 'நாட்ச்' என்பது நேரிடையாக நாட்டியத்தையே குறிக்கும். அரசவையில் ஆடப்பட்ட 'நாட்ச்' நாட்டியத்தின் உருப்புகளாவன ஐக்கிணி, பேரணி, த்ருபத நாட்ச், தேசி நவ பத நாட்ச், காண்சின் நாட்ச், கொண்டல், கோப்கர்பா நாட்டியம், சங்கீதமேளம், லேடீஸ் நாட்ச், திப்பிரி மற்றும் சித்ர நாட்டியம் ஆகும்.

இவற்றுள் பல வகைகள் இன்றும் வழக்கில் உள்ளன. வடகத்திய கலாச்சாரத்தின் பாதிப்பாக வந்தவையே, நமது கோலாட்டமும், பின்னல் கோலாட்டமும் ஆகும். தற்போது அவ்வளவு பிரபலமாக இல்லாவிட்டாலும், இன்றும் தமிழகத்து பெண்டிரிடையே இந்நாட்டியம் வழக்கத்தில் உள்ளது.

அடுத்து வருவது யகூகானம் இது, சிருங்கார ரஸத்தில் அமைந்து, இசை, இலக்கியம் மற்றும் நாட்டியம் ஆகிய மூன்றின் அழகிய கலவையாகும். அவற்றுள் ஒன்றான சந்திர சேகர விலாச நாடகம், கீத கோவிந்தத்தைப் போன்றே அமைந்துள்ளதாகக் கருதப்படுகிறது. மற்றுமொரு முக்கியத்துவம் பெற்ற நாட்டிய நாடகம், குறவஞ்சி ஆகும். 18 ஆம் மற்றும் 19 ஆம் நூற்றாண்டில் பல நூறு குறவஞ்சி நாடகங்கள் எழுதப்பட்டன. இவையும், நாட்டியம், இசை மற்றும் இலக்கியத்தின் இனிய கலவையாகும். வழக்கு மொழியில், ஒர் இடத்தின் அழகை

வெளிப்படுத்தும்படியாக அமைந்து அனைத்து தட்டு மக்களும் பக்தி மார்கத்தில் திளைக்க வழிவகுத்தன சஹாஜி ராஜா குறவஞ்சி தியாகேச குறவஞ்சி, வெள்ளைப் பிள்ளையார் குறவஞ்சி மற்றும் குற்றாலக்குறவஞ்சி ஆகியவை இக்காலகட்டத்தின் குறிப்பிடத்தக்கவையாகும் மானுடர் அல்லது தெய்வ சிருங்காரத்தின் வெளிப்படையாக குறவஞ்சிகள் அமைந்தன. பின்வந்த குறவஞ்சிகள் அமைப்பில் வேறுபட்டாலும், பக்தி வெளிப்பாட்டில் மாற்றம் ஏதும் காணவில்லை.

**பாகவத மேளா:-**

இவ்விலக்கியம், கோவில் பிரகாரத்திற்குள் மட்டுமே முதலில் நடத்தப்பட்டது. முதலிலிருந்தே, காலத்தின் மாற்றம் பாதிக்காதப்படி, மிகவும் கட்டுப்பாட்டுடன் இவை பாதுகாக்கப்பட்டன. நாட்டியத்தின் மூன்று கூறுகளான நிருத்த, நிருத்திய மற்றும் நாட்டிய ஆகிய அனைத்தையும் இவை கொண்டிருக்கின்றன. இன்றளவும் பாகவதமேளா நாடகங்கள் அதன் தனித்தன்மையான அமைப்பு மாறாமல், நரஸிம்ம ஜெயந்தி போன்ற சிறப்பு தினங்களில் நடத்தப்படுகின்றன.

மன்னர்களின் வீரம் போன்ற பெருமைகளைப் போற்ற, அரசவையின் நிருத்த மண்டபங்களில் நாட்டிய நாடகங்கள் நடத்தப்பட்டன. லாவணி போன்ற குழு நடனங்களும் மராட்டிய காலத்தில் உருவானவை இதில், குழுத் தலைவர், நிகழ்ச்சியை நடத்தும் பொழுதே, பாடல் மற்றும் ஆடலை உருவாக்கி படைக்கக் கூடியவராக இருந்தல் வேண்டும் . சிருங்கார லாவணி, நோட்லாவணி, சம்பத் சாரா லாவணி, ப்ரகதி லாவணி மற்றும் வேதாந்த லாவணி போன்றவை சில வகைகளாகும்.

செர்ஃபோஜி மகாராஜாவின் நாட்டிய நூல்கள், பரதநாட்டிய மார்க்கத்தின் பல்வேறு நாட்டிய உருப்புகளை மிக நேர்த்தியாக விளக்குகின்றது. அவரது நாட்டிய உருப்படிகள் நிச்சயமாக தற்போதையை பரதநாட்டிய மார்க்கத்தின் முன்னோடியாகும். அவர் உருவாக்கிய நாட்டிய உருப்படிகள் சில ஸ்வரஜதி, பதவர்ணம், தில்லானா, ஜாவளி, பாலன, கவுத்துவம்.

**மராட்டிய மன்னர் காலத்தில் தஞ்சை நால்வர்:**

நாட்டியத் துறைக்கும், இசைத் துறைக்கும், மராட்டிய மன்னர்களின் அரசவைக்குப் பெருமைச் சேர்த்த தஞ்சை நால்வரின் பங்கு வானளாவியது அந்நான்கு சகோதரர்கள்.

சின்னையா கி.பி. 1802

பொன்னையா கி.பி. 1804

சிவானந்தம் கி.பி. 1808

வடிவேலு கி.பி. 1810

அவர்களது தந்தையார், மன்னார்குடி சுப்பராய நட்டுவனார். அந்நான்கு சகோதரர்களும் முத்துசுவாமி தீஷிதரிடம் இசைப் பயின்றனர். தஞ்சை மற்றும் திருவிதாங்கூர் அரசவைப் புலவர்களாகப் பணியாற்றினர். தஞ்சை பெரிய கோவிலில் சரபேந்திர பூபாலக் குறவஞ்சி என்ற குறவஞ்சி நாடகத்திற்கு இசை மற்றும் நாட்டியத்தை இயற்றி, அதனை அரங்கேற்ற அவர்களே முன்னோடிகளாயிருந்தனர்.

அவ்வப்போதைய தேவைக்கு ஏற்ப, அவர்கள் பல புதிய அலாரிப்பு, ஜதீஸ்வரம், சப்தம், வர்ணம், பதம், தில்லானா, தரு மற்றும் கவுத்துவங்களை இயற்றியுள்ளனர். மேலும், ஓர் பரதநாட்டிய நிகழ்ச்சிக்கு வேண்டிய மார்க்கத்தை அவர்கள்தான் வடிவமைத்தனர். நால்வரில், பொன்னையா அவர்கள், கர்னாடக இசைக் கற்பதற்கான வழிமுறையை, முறையே சரளி, ஜண்டை, அலங்காரம் என உருவாக்கினார். மேலும் அவர், நிருத்தத்தின் முக்கிய கூறான அடவுகளையும் பல்வேறு பாகுபாட்டின் கீழ் கொண்டு வந்து அவற்றை வடிவமைத்தார். அவர் குறிப்பிடும் அடவுகள்.

1. தட்டடவு, 2. நாட்டடவு, 3. குதித்த அடவு, 4 ஜாதி அடவு,
5. தட்டுமெட்டு அடவு, 6. மெய் அடவு, 7. இறுதி அடவு, 8. மெட்டு அடவு,
9. நடை அடவு மற்றும் 10. முடிவு அடவு

**பொன்னைய்யா அவர்களின் மார்க்க உருப்படிகள்:**

பொன்னைய்யா அவர்கள் வடிவமைத்த மார்க்கத்தில் அடங்கும் பரதநாட்டிய உருப்படிகள்.

அலாரிப்பு, ஜதீஸ்வரம், சப்தம், பதவர்ணம், ஸ்வரஜதி, பதம், ராகமாலிகா மற்றும் ஸ்லோகம் என்பன ஒர் பரதநாட்டிய கலைஞரின் அரங்கேற்றத்தின் போது இம்மார்க்கம் மிக ஊதியாகக் கடைப்பிடிக்கப்படுகின்றது.

மேலும் அவர் நாட்டியத்திர்காகவென ப்ல பாடல் வகைகளை இயற்றியுள்ளார் அவை.

அதி மோஹம் - பதவர்ணம்

சலமேல - வர்ணம்

சகியே இந்த - பதவர்ணம்

மோஹமான - வர்ணம்ட்

யே மாயலாடி - வர்ணம் மற்றும்

காபி, காமஸ் மற்றும் ஹிந்தோளம் தில்லானாக்கள் மிக ப்ரசித்திப் பெற்றவை.

**சின்னையா அவர்களின் நாட்டிய உருப்படிகள்:**

மைசூர் மஹாராஜாவின் அவையில் சின்னையா பணியாற்றினார். அவரும் பல பதவர்ணம், கீர்த்தனம் மற்றும் ஜாவளி இயற்றினார். அவற்றில் ஒன்று, தன்னை ஆதரித்த அரசர், காமராஜரை பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு 'ஏ மஹீவ போதின்சே' என்ற வர்ணம் ஆகும்.

கோவில்களில் நாட்டியத்தை ஓர் முக்கியச் சடங்காக உருவாக்கினார். கடவுளுக்கு அளிக்கப்படும் ஷோடச உபசாரங்களில் ஒன்றாகவும், தீபாராதனையின் முக்கிய அங்கமாகவும் நாட்டியத்தை உருவாக்கி, அதற்கென்ற ஜதிகளையும் நிருத்தங்களையும் இயற்றினார். அவரே, கோவில் உற்சவங்களில் நிகழ்த்துவதற்கென்றே, நவசந்தி கவுத்துவங்களை முறையான தாள அமைப்புடனும், இசையுடனும் அமைத்தார். சுப்பையா பண்டாரம் என்பவருக்கு நாட்டியம் பயிற்றுவித்து, பெண்களுக்கு இணையாக ஆணகளும் நன்கு ஆட முடியும் என்பதனை நிரூபித்தார்.

நால்வரில் அனைவருக்கும் இளையவர், வடிவேலு ஆவார். கர்னாடாக இசைக்கு முதன் முதலில் வயலின் என்ற மேற்கத்திய இசை வாத்தியத்தை கர்னாடாக இசைக்கும் வாசிக்க முடியும் என நிரூபித்தார்.

**3. தற்காலத்தின் ஆடற்கலையின் கலாச்சார மாற்றங்கள்:**

தஞ்சை நால்வர்கள் 'நிரூபணம்' என்ற அமைப்பை மாற்றி தற்காலத்திற்கேற்ப 'மார்க்கம்' என்ற அமைப்பை உருவாக்கினர். இதுவரைத் தொடரப்பட்டாலும் தற்போது கலைகளிலும், கலாச்சாரதிலும் மாற்றம் ஏற்பட்டுதான் இருக்கிறது. எப்படி என்றால், விஞ்ஞான வளர்ச்சி மேலை நாடுகளில் உள்ள தொழிநுட்பங்களில், நடனக் கலையில் தற்கால கலைஞர்கள் பயன்படுத்த ஆரம்பித்துள்ளார்கள். உடை, ஒப்பனை, மேடை, ஒலி, ஒளி அமைப்பு போன்றவற்றை வெளிநாட்டுக் கலச்சாரத்தை அதிகம் நாம் பயன்படுத்துகின்றோம்.

நாம் ஆடுவது தமிழ் மொழியில் என்றாலும் தொழில் நுட்பம் இதில் வெளிநாட்டுக் கலச்சாரம் உள்ளே புகுத்தப்பட்டுவிட்டன. அத்துடன், தற்காலத்துக் கலைஞர்கள் பல்வேறு மாநிலங்களுக்கும், வெளி நாடுகளுக்கும் நாட்டியம் ஆடச் செல்வதால் அங்குள்ள சில தொழில் நுட்பங்களையும், கலாச்சாரங்களையும் பரத நாட்டியத்தில் புகுத்தி வருகிறார்கள் என்று சொன்னால் இதனுடைய பாரம்பரியம் கெடாமல் புகுத்தி வருகிறார்கள். தற்காலத்தில், தொழில் நுட்பத்தின் காரணமாக ஆடற்கலையில் புதிய புதிய கலாச்சாரங்கள் தோன்றிக் கொண்டுதான் வருகின்றது.

இது ஒருபுறம் இருக்க, பாடல்களிளும் சில கலாச்சார மாற்றங்கள் ஏற்பட்டு வந்துவிட்டன. தேவதாசிகள் ஆடிக்கொண்டிருந்த மார்க்கம் சிருங்காரம் நிறைந்த பாடல்களே ஆடிக்கொண்டு வந்தன. தற்காலத்தில், கலைஞர்கள் அதில் கொஞ்சம் மாற்றம் கண்டு புதிது புதிதாக கலாச்சாரங்களையும், புதிது புதிதாக கருத்துக்களையும் இதில் சேர்த்துள்ளார்கள். அது

என்னவென்றால் தீண்டாமை, குழந்தைத் தொழிலாளர், விவசாயிகள், பாலியல் வண்கொடுமை, ஒருவரின் வரலாறு பற்றிக் கூறுவது, பெண் கல்வி, சுனாமி, பூகம்பம், இயற்கையின் அழகு, இயற்கையின் அழிவு போன்றவற்றை எல்லாம் நடனத்தில் ஆடி கொண்டு வந்துவிட்டார்கள். தேவதாசி காலத்தில் மிகவும் கொச்சையான பாடல்களே ஆடப்பட்டன தற்காலத்தில் 'பக்தி' என்ற கலாச்சாரத்திற்கு மாறி உள்ளது. தற்போது நிறைய 'பக்தி பாடல்' அதாவது கடவுள் பெயரில் உள்ள பாடல் நிறைய மேடைகளில் ஆடி வருகிறார்கள்.

**முடிவுரை:-**

மராட்டியர் கால கலையும், கலாச்சாரமும் நாயக்கர் மன்னர் காலத்தில் இருந்த 'நிரூபண்ம்' என்ற அமைப்பை மாற்றி 'மார்க்கம்' என்ற அமைப்பிற்கு தஞ்சை நால்வரால் மாற்றப்பட்டது. பின். மராட்டிய மன்னர் காலத்தில் மேலை நாட்டு நடனம் (Western), பரதநாட்டியம், வடமொழி, மராத்திய நாட்டியம் என நிறைய நடனம் ஆடி இருந்தனர். பரதநாட்டியத்திற்கு முதன் முதலில் வயலின் வாசித்து நாட்டியம் ஆட வைத்தது தஞ்சை நால்வரின் ஒருவரான வடிவேலு அவர்களுக்கே அந்த பெருமை சேரும். மராட்டியர்காலத்தில் வயலின், சாக்ஸபோன் போன்ற மேலை நாட்டுக் கருவிகளை நாட்டியத்திற்க்கும், பாடல்களிற்கும் இசை அமைத்து வந்தனர். பின் மராட்டியர் காலத்தில் ஐந்து வகையான மொழிகளில் பாடல் இயற்றப்பட்டன அதற்கு நடனமும் ஆடினார்கள். ஆங்கில பாடலிற்கும் நடனம் ஆடியுள்ளனர். வெளிநாட்டு இசைக்கருவிகளை மராட்டியர் வெளிக் கொண்டு வந்தனர். தற்காலத்தில் கலைஞர்கள் வெளிநாட்டிற்கு சென்று பல கலை நிகழ்ச்சி நடத்தி வருவதால் அங்குள்ள தொழில் நுட்பங்களை, குறிப்பாக மேடை, உடை, ஒப்பனை, ஒலி, ஒளி போன்றவற்றில் புதிது புதிதாக கலாச்சாரங்களை கொண்டு வந்து, நமது பரத நாட்டியத்தில் சேர்த்துள்ளார்கள் என்பதை முடிவாகப் பதிவு செய்கின்றேன்.

**துணை நூற்ப்பட்டியல்:-**

1. பரத இசையும் தஞ்சை நால்வரும் (இசைத் துறை தமிழ்ப் பல்கலைக் கழகம் தஞ்சாவூர்).
2. முதுகலை நாட்டியம் நாட்டியத்தின் வரலாறு (சென்னைப் பல்கலைக் கழகம்)
3. மராட்டியர் வளர்த்த நுண்கலைகள் (சரஸ்வதி மஹால் தஞ்சாவூர்)
4. நாயக்க மன்னர் ஆட்சிக்கலை (இசைத்துறை தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்)
5. பழந்தமிழர் கூத்தே பரதநாட்டியம் (பாண்டியன் பாசறை, சென்னை).